திருவாடானை அரசுப்பள்ளியில்

மாற்றுத்திறனாளி மாணவரை சரமாரியாக தாக்கிய மாணவர்கள்

திருவாடானை, ஆக.23: ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானையில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சில தினங்களுக்கு முன்பு பிளஸ் 1 வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது, 3 மாணவர்கள் செல்போன் பார்த்துக் கொண்டிருந்தனர். இதை கவனித்த ஆசிரியர், அவர்களை கண்டித்தார். தங்களை மாற்றுத்திறனாளி மாணவர் ஒருவர் காட்டிக் கொடுத்ததாக 3 மாணவர்களும் சந்தேகமடைந்து அவரை சரமாரியாக தாக்கினர். காயமடைந்த அவர், பெற்றோரிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து அவர்கள் தலைமை ஆசிரியரிடம் புகார் அளித்தனர். விசாரணை நடத்திய தலைமை ஆசிரியர், மாற்றுத்திறனாளி மாணவரை தாக்கிய 3 மாணவர்களை கடுமையாக கண்டித்தார். அவர்களுக்கு நேற்று முன்தினம் மாற்றுச் சான்றிதழ்(டிசி) வழங்கி நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த சம்பவம் திருவாடானை பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12,324 கனஅடியாக உயர்வு

▶ மேட்டூர் அணையின் நீர்மட்டம் 86 அடியை எட்டியுள்ளது. அணை மற்றும் சுற்றுப்பகுதியின் ரம்மியமான காட்சி.

மேட்டூர், ஆக.23: கர்நாடக மாநிலம், கபினி அணையில் இருந்து திறக்கப்படும் உபரிநீர் காரணமாக, ஒகேனக்கல் காவிரியில் கடந்த 4 நாட்களாக நீர்வரத்து 12,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 10 ஆயிரம் கனஅடியாக சரிந்துள்ளது. எனினும் காவிரி ஆற்றில் பரிசல் இயக்க விதிக்கப்பட்ட தடை 7வது நாளாக நேற்று நீடித்தது. அதே போல், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம், விநாடிக்கு 10,414 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை 12,324 கனஅடியாக அதிகரித்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

திறக்கப்படும் நீரின் அளவை விட, வரத்து அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 85.17 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 85.95 அடியாக உயர்ந்துள்ளது. இதனிடையே, கபினி அணையில் இருந்து விநாடிக்கு 12,940 கனஅடி நீரும், கேஆர்எஸ் அணையில் இருந்து 2,879 கனஅடி நீரும் காவிரியில் திறக்கப்படுகிறது.

மதுரை ஆசிரியையுடன் கள்ளக்காதல்

திருமணம் செய்வதாக ஏமாற்றிய இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட்

டிஜிஜி அதிரடி நடவடிக்கை

நெல்லை, ஆக. 23: திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி மதுரை ஆசிரியையை ஏமாற்றிய வீரவநல்லூர் இன்ஸ்பெக்டர் அருண்குமார் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

மதுரை மாநகரம் தெப்பக்குளம் போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றியவர் அருண்குமார் (40). திருமணமானவர். அங்கு சிறப்பாக பணியாற்றிய அவருக்கு கடந்த 2020-21ல் மத்திய உள்துறை அமைச்சக உத்கிருஷ்ட சேவா விருதை அப்போதைய மதுரை போலீஸ் கமிஷனர் லோகநாதன் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் இன்ஸ்பெக்டர் அருண்குமாருக்கு, மதுரை, வண்டியூர் தெப்பக்குளம் பகுதியைச் சேர்ந்த கணவனை இழந்த 40 வயதான பெண்ணுடன் அறிமுகம் ஏற்பட்டது. அவருக்கு குழந்தைகள் இல்லை. ஆசிரியையாக பணியாற்றிய அந்த பெண்ணுக்கும், இன்ஸ்பெக்டர் அருண்குமாருக்கும் கள்ளக்காதல் உருவானது. இது தெரிந்து இன்ஸ்பெக்டரின் மனைவி, ஆசிரியையுடனான தொடர்பை கைவிடும்படி வலியுறுத்தி வந்தாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அருண்குமார் நெல்லை காவல் சரகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார். இதனால் அவர் குடும்பத்துடன் நெல்லைக்கு குடியேறி, மானூர் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றினார். மதுரையில் இருந்து நெல்லைக்கு வந்த பின்னரும் ஆசிரியையுடன் பழக்கத்தை தொடர்ந்ததாகவும், அவரை திருமணம் செய்வதாகக் கூறி நெல்லைக்கு அழைத்து வந்து தனிவீடு எடுத்துக் கொடுத்து தங்க வைத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்து தெரிந்து இன்ஸ்பெக்டரின் மனைவி அந்த ஆசிரியையை திட்டியுள்ளார். இதுதொடர்பாக கணவன், மனைவி இடையே பிரச்னை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அருண்குமார் வீரவநல்லூர் இன்ஸ்பெக்டராக மாற்றப்பட்டார். பிரச்னை அதிகரிக்கவே திடீரென இன்ஸ்பெக்டர் அருண்குமார் ஆசிரியையிடம் பேசுவதை தவிர்த்ததாகவும், அவர் போனில் தொடர்பு கொண்டபோது அழைப்பை துண்டித்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் அந்த ஆசிரியை சில நாட்களுக்கு முன்பு வீரவநல்லூர் காவல் நிலையத்திற்கு சென்று பிரச்னை செய்துள்ளார். பின்னர் நெல்லை ஊரக உட்கோட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் அருண்குமார் மீது புகார் அளித்தார். போலீசார் விசாரணை நடத்தி, ஆசிரியையை திருமணம் செய்வதாக ஏமாற்றியது, மனரீதியாக கொடுமைப்படுத்தியது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 5 பிரிவுகளின் கீழ் கடந்த 21ம் தேதி வழக்குப்பதிவு செய்தனர்.

இதைத் தொடர்ந்து, ஒழுங்கீன நடவடிக்கையில் இன்ஸ்பெக்டர் ஈடுபட்டதாக கூறி நெல்லை மாவட்ட எஸ்பி விஷ்வேஷ் பா.சாஸ்திரி துறைரீதியான நடவடிக்கை எடுக்க நெல்லை சரக டிஐஜிக்கு பரிந்துரை செய்தார். அதன்பேரில் டிஐஜி திருநாவுக்கரசு, இன்ஸ்பெக்டர் அருண்குமாரை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டார்.

நாளை முதல் காஸ்... முதல் பக்க தொடர்ச்சி

சராசரியாக 85 சதவிகிதம் வாடிக்கையாளர்கள் தங்களது இகேஒய்சி விபரங்களை பதிவேற்றம் செய்து விட்ட நிலையில் 15% வாடிக்கையாளர்கள் பதிவு செய்யவில்லை என கூறப்படுகிறது. இன்றுடன் கெடு முடிவதால் தமிழகம் முழுவதும் சுமார் 50 லட்சம் வாடிக்கையாளர்கள் நாளை முதல் மானியத்துடன் கூடிய வீட்டு உபயோக சிலிண்டர் புக் பண்ண முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் பதிவேற்றம் செய்யாத வாடிக்கையாளர்கள் தவித்து வருகின்றனர். மேலும் கால அவகாசம் வழங்க கோரிக்கை எழுந்துள்ளது.

பதிவு செய்வது எப்படி?

கேஸ் விநியோகஸ்தர்கள் சார்பில் வீடுகளுக்கு காஸ் சிலிண்டர் விநியோகிக்கின்ற பணியாளர்கள் தங்கள் கைகளில் உள்ள ஆண்ட்ராய்டு மொபைலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள ஆப் மூலம் வீடுகளுக்கு சிலிண்டர் விநியோகம் செய்யும் பொழுது இத்தகைய இகேஒய்சி பதிவை முடித்து விடுகின்றனர். அதாவது யார் பேரில் இணைப்பு உள்ளதோ அவரை மொபைல் கேமராவை பயன்படுத்தி போட்டோ எடுத்து பதிவேற்றம் செய்கின்றனர். இது மிகவும் எளிமையான நடைமுறையாகும். ஒரு சிலர் விநியோகஸ்தர்களின் அலுவலகத்திற்கு சென்று விநியோகஸ்தர்களிடம் உள்ள மொபைலில் இ கேஒய்சி பதிவேற்றம் செய்கின்றனர். வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு எண்ணெய் நிறுவனங்கள் சார்பில் ஆப் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த ஆப்பில் உள்நுழைந்து இகேஒய்சி விபரங்களை பதிவு செய்து கொள்ளலாம். தமிழகத்தில் இணைப்பு பெற்றுள்ள குடும்பத் தலைவர்களின் குடும்பம் தமிழகத்தில் வசித்து வரும் நிலையில் குடும்பத் தலைவர்கள் மட்டும் உலகில் கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு இத்தகைய ஆப் மொபைல் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

3 மணி நேரத்தில் மலர்ந்த காதல் மதுரை டிரைவருடன் ஆஸி. பெண் திருமணம்

அவனியாபுரம், ஆக. 23: 3 மணி நேரத்தில் மலர்ந்த காதல் திருமணத்தில் முடிந்தத நிலையில், ஆஸ்திரேலிய பெண் - மதுரை டிரைவர் தம்பதி விசாவுக்காக காத்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்தவர் லோரினா. இவர், இந்தியாவிற்கு சுற்றுலா வந்துள்ளார். மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் உள்ள சுற்றுலா இடங்களை கண்டு ரசிப்பதற்காக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் விமானம் மூலம் மதுரை வந்துள்ளார். மதுரை விமான நிலையத்தில் வாடகை கார் டிரைவரான ரபீக்கின் காரில் லோரினா பயணம் செய்துள்ளார். சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக காந்தி மியூசியம், திருமலை நாயக்கர் மகால், மீனாட்சி அம்மன் கோவில் உள்ளிட்ட இடங்களுக்கு லோரினாவை காரில் அழைத்துச் சென்று காட்டியுள்ளார் ரபீக்.

அப்போது ரபீக்கின் விளக்கம் மற்றும் பேச்சில் லோரினா மயங்கி, தனது காதலை கூறியுள்ளார். இருவரும் வெவ்வேறு மதங்கள் என்பதால் முதலில் யோசித்த ரபீக், பின்னர் தனது காதலை கூறியுள்ளார். மதத்தையும், நாட்டையும் தாண்டிய இருவரது காதல் திருமணத்திற்கு சென்றுள்ளது. இதற்கு, லோரினா மற்றும் ரபீக்கின் குடும்பத்தினர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். ஆனாலும், மதத்தை கடந்த இக்காதல் வென்று இருவரும் திருமணம் செய்துள்ளனர். ரபீக்கின் நண்பர்கள் மூலம் சிறப்பு திருமண சட்டப்படி இருவரும் திருமணம் செய்து கொண்டு மதுரையில் குடும்பமாக வாழ்ந்துள்ளனர். அப்போது லோரினா கர்ப்பமான நிலையில், சுற்றுலா விசாவில் வந்திருந்ததால், ஆஸ்திரேலியா கிளம்பி சென்றார். இதையடுத்து ரபீக்கும் சுற்றுலா விசா மூலம் ஆஸ்திரேலியா சென்று வந்துள்ளார்.

விசாவுக்காக குழந்தையுடன் இரு நாடுகளுக்கும் மாறி, மாறி பயணம்

லோரினாவிற்கு ஆஸ்திரேலியாவில் பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு மரியம் என பெயர் சூட்டிய நிலையில், குழந்தை பிறந்து 2 மாதத்திற்கு பிறகு, ரபீக் இங்கிருந்து ஆஸ்திரேலியா சென்று தனது குழந்தையை பார்த்துள்ளார். லோரினாவிற்கு இந்தியாவில் நிரந்தர விசாவும், ரபீக்கிற்கு ஆஸ்திரேலியாவில் நிரந்தர விசாவும் கிடைக்காத நிலையில் இருவரும் இரு நாடுகளில் நிரந்தர விசா பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். எந்த நாட்டில் முதலில் விசா கிடைக்கிறதோ அந்த நாட்டில் குடும்பமாக வாழலாம் என முடிவு செய்து இரு நாடுகளுக்கும் தனது குழந்தையோடு பறந்து கொண்டிருக்கின்றனர்.

காதல் சாதி, மதம் பார்க்காது என்ற நிலையில், நாடு கடந்து காதலால் சேர்ந்துள்ள இருவரும் விரைவில் ஏதாவது ஒரு நாட்டில் விசா கிடைத்ததும் வாழத் தயாராகி வருகின்றனர்.

சிவகங்கையில் உட்கட்சி பூசல் விஸ்வரூபம்

அமைச்சர் விழாவை புறக்கணித்த தவெக எம்எல்ஏ

சிவகங்கை, ஆக. 23: சிவகங்கையில் கடந்த திமுக ஆட்சியில் ரூ.14.74 கோடி செலவில் கட்டப்பட்ட கல்லூரி மாணவியர் தங்கும் விடுதி, கிராம அறிவு மைய கட்டிடங்கள் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. கட்டிடங்களை அமைச்சர் பிரபு திறந்து வைத்தார்.

விழாவில், சிவகங்கை தொகுதி தவெக எம்எல்ஏ குழந்தைராணி நாச்சியார் பங்கேற்கவில்லை. வேண்டுமென்றே புறக்கணித்ததாக கூறப்படுகிறது. அவர், அமைச்சர் பதவியை எதிர்பார்த்த நிலையில் பிரபுவிற்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது ஆதரவாளர்களை அதிருப்தியடைய செய்தது. இதையடுத்து இருதரப்பினருக்கும் மறைமுக மோதல் நீடித்து வருகிறது. ஒருவர் நிகழ்ச்சியில் மற்றவர் கலந்து கொள்ளாமல் இருப்பது, அமைச்சர் படத்தை எம்எல்ஏ தரப்பினரும், எம்எல்ஏ படத்தை அமைச்சர் தரப்பும் போடாமல் இருப்பது தொடர்கிறது. தற்போது எம்எல்ஏ தொகுதியில் நடைபெற்ற முக்கிய அரசு நிகழ்ச்சியில் அமைச்சர் பங்கேற்றும் எம்எல்ஏ கலந்து கொள்ளாதது இருவருக்கும் மோதல் இருப்பதை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

வேறு பெண்களுடன் தொடர்பு தட்டிக்கேட்ட

மனைவியை தாக்கிய புகாரில் பரமக்குடி டிஎஸ்பி சஸ்பெண்ட்

பரமக்குடி, ஆக. 23: மனைவியை தாக்கிய புகாரில் பரமக்குடி டிஎஸ்பி சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் டிஎஸ்பியாக இருந்தவர் ஜாபர் சித்திக். இவரது மனைவி ஷோபனா. இவர் கடந்த 4ம் தேதி வேலூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில், ''எனது கணவர் ஜாபர் சித்திக் வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருந்ததை நான் தட்டி கேட்டதால் அவர் என்னை தாக்கினார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என தெரிவித்திருந்தார். இதன் பேரில் வேலூர் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வந்தனர். நேற்று முன்தினம் வேலூர் போலீசார் பரமக்குடிக்கு வந்து டிஎஸ்பி ஜாபர் சித்திக்கிடம் விசாரணை நடத்தினர். மேலும், அவரது அறையில் சோதனை செய்தனர். தொடர்ந்து இரவோடு, இரவாக அவரை வேலூர் அழைத்து சென்றனர். இந்நிலையில் தமிழக உள்துறை செயலாளர், துறைரீதியான நடவடிக்கையாக ஜாபர் சித்திக்கை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டார். தொடர்ந்து ராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு டிஎஸ்பி சிவசங்கரன் பரமக்குடிக்கு பொறுப்பு டிஎஸ்பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எல்எச்பி பெட்டிகளாக மாறுவதால்

செந்தூர் எக்ஸ்பிரசில் 72 சீட்கள் பறிபோகும்

நெல்லை, ஆக. 23: திருச்செந்தூர் - சென்னை - திருச்செந்தூர் இடையே செந்தூர் எக்ஸ்பிரஸ் (20605/20606) ரயில் இயக்கப்பட்டு வருகிறது. திருச்செந்தூரில் இருந்து புறப்பட்டு, தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, சிதம்பரம், சீர்காழி என ஆன்மிக நகரங்கள் வழியாக செல்வதால் இந்த ரயிலுக்கு பக்தர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு உள்ளது.

இந்நிலையில் செந்தூர் எக்ஸ்பிரஸ் ரயில் சென்னை - திருச்செந்தூர் வழித்தடத்தில் வருகிற அக்டோபர் 20ம் தேதியும், திருச்செந்தூர் - சென்னை மார்க்கத்தில் அக்.21ம் தேதி முதலும் நவீன எல்.எச்.பி ரயில் பெட்டிகளுடன் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பெட்டிகளின் எண்ணிக்கை தற்போதுள்ள 23ல் இருந்து 21 ஆக குறைக்கப்படுகிறது. அதாவது, தற்போது செந்தூர் எக்ஸ்பிரஸ் ரயில் 11 இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி கொண்ட பெட்டிகளுடன் இயக்கப்படுகிறது. மொத்தம் 792 டிக்கெட்டுகள் கிடைக்கும்.

ஆனால் புதிய எல்எச்பி பெட்டிகள் இணைக்கப்படும் போது இரண்டாம் வகுப்பு படுக்கை வசதியுள்ள பெட்டிகளின் எண்ணிக்கை 9 பெட்டிகளாக குறைக்கப்படுகிறது. இதில் ஒரு பெட்டியில் 80 படுக்கைகள் இருப்பதால் 720 டிக்கெட்டுகள் மட்டுமே பயணிகளுக்கு கிடைக்கும். இதன் மூலம் 72 படுக்கை வசதி டிக்கெட்டுகள் பறிபோய் விடும். இதனால் பெட்டிகளின் எண்ணிக்கையை குறைக்க பக்தர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

நீட் தேர்வை ரத்து செய்ய திக சார்பில் டுவீலர் பேரணி

திருமங்கலம், ஆக. 23: தமிழகத்தில் நீட் தேர்வினை ரத்து செய்ய வலியுறுத்தியும், இடபிள்யூஎஸ் என்ற 10 சதவீத இடஒதுக்கீட்டை கண்டித்தும் திராவிட கழகம் சார்பில் மாநிலம் தழுவிய பிரசார இயக்கம் துவக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் - தென்காசி டுவீலர் பேரணியை திக இளைஞரணியினர் மேற்கொண்டனர். இதன் துவக்கவிழா நேற்று மதுரை மாவட்டம் திருமங்கலம் ராஜாஜி சிலை அருகே நடைபெற்றது. பேரணியை திக தலைவர் வீரமணி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம், கி.வீரமணி கூறுகையில், ஒன்றிய பாஜ அரசு நாள்தோறும் ரூ.2,500 சம்பாதிப்போரை உயர் ஜாதி ஏழைகள் என முத்திரை குத்தி, அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கும் சமூக அநீதியை அரங்கேற்றி வருகிறது. இதனை கண்டித்து நாடு தழுவிய போராட்டத்தை துவக்கியுள்ளோம் என்றார்.

தெற்கு இரயில்வே

கட்டுமான நிறுவனம் / எர்ணாகுளம் சந்திப்பு

(1) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 27-CE-CN-ERS-2026-OT தேதி : 20.08.2026 பணி பற்றிய விவரம் : துறவூர் - மராரிகுளம் (TUVR - MAKM) இடையே இரட்டை இரயில் பாதை சேர்த்தலை யார்டு மற்றும் மராரிகுளம் யார்டு.	
ஒப்பந்தப்புள்ளி மதிப்பு : ரூ. 8133.28 லட்சம்	
ஒப்பப்புள்ளி காப்புறுதி தொகை : ரூ. 1,62,66,600.00/-	
பணியை முடிப்பதற்கான காலம் : 24 மாதங்கள்	
(2) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 28-CE-CN-ERS-2026-OT தேதி: 20.08.2026 பணி பற்றிய விவரம் : துறவூர் - மராரிகுளம் (TUVR - MAKM) இடையே இரட்டை இரயில் பாதை துறவூர் மற்றும் சேர்த்தலை	
ஒப்பந்தப்புள்ளி மதிப்பு : ரூ. 9320.92 லட்சம்	
ஒப்பப்புள்ளி காப்புறுதி தொகை : ரூ. 1,86,41,900.00/-	
பணியை முடிப்பதற்கான காலம் : 24 மாதங்கள்	
ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும் 23-09-2026 அன்று 15.00 மணி	

முழுமையான விவரங்களையும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தையும் https://www.ireps.gov.in இணையதளத்தில் காணலாம்.

தலைமை பொறியாளர்
கட்டுமானம் / எர்ணாகுளம் சந்திப்பு

வடக்கு மத்திய ரயில்வே

மின்-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.: SIG-WS-CONTRACT-584 தேதி: 19.08.2026

மின்-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.: SIG-WS-CONTRACT-584, தேதி: 19.08.2026 இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பாக, பிரயாக்ராஜில் உள்ள வடக்கு மத்திய ரயில்வேயின் முதுநிலை தலைமை சிக்னல் & தொலைத்தொடர்பு பொறியாளர், கட்டுமானம், ஜிஎம் அலுவலகம், பெட்வா பில்டிங், சப்தர்கஞ்ச், பிரயாக்ராஜ் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில்" ஆன்லைன் மின்-ஒப்பந்தப்புள்ளிகளை 14.09.2026 தேதியன்று 15:00 மணி வரை கோருகிறார். அதேநாளில் 15:30 மணியில் திறக்கப்படவிருக்கிறது.

ஒப்பந்தப்புள்ளி எண்: SIG-WS-CONTRACT-584	நிறைவடையும் காலம்: 12 மாதங்கள்
பணியின் பெயர்: வட மத்திய ரயில்வேயின் பிரயாக்ராஜ் கோட்டத்தில் உள்ள CAR-CPU பிரிவில், இரட்டைப் பாதை பணிகளுடன் தொடர்புடைய சிக்னலிங் மற்றும் தொலைத்தொடர்பு கேபிள்கள் மற்றும் உபகரணங்களின் இடையூறு நீக்கம் / பயன்பாட்டு மாற்றம் செய்தல்.	
பணியின் தோராய செலவு (ரூ.): ரூ. 2,79,34,116.38 (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து ஒன்பது லட்சத்து முப்பத்து நான்கு ஆயிரத்து நூற்று பதினாறு மற்றும் பைசா முப்பத்து எட்டு மட்டும்).	
முன் பணம் (ரூ.): ரூ.5,58,700 /- (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து எழுநூறு மட்டும்)	
டெண்டர் முடிவடையும்/திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்: முடிவடைதல் 14.09.2026 தேதி 15:00 மணி வரை மற்றும் திறக்கப்படுதல் அதேநாளில் 15:30 மணி.	
டெண்டரின் முழுமையான விவரங்களைக் காணக்கூடிய இணையதளம் மற்றும் அறிவிப்புப் பலகை அமைவிடம்: இணையதளம் www.ireps.gov.in அறிவிப்புப் பலகை துணை தலைமை சிக்னல் & தொலைத்தொடர்பு பொறியாளர்/கட்டுமானம்/வட மத்திய ரயில்வே/பிரயாக்ராஜ், GM அலுவலகம், பெட்வா கட்டிடம், சுபேதார்கஞ்ச், பிரயாக்ராஜ் அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளது. 1926/26 (C)	

North central railways www.ncr.indianrailways.gov.in @ CPRONC

தெற்கு ரயில்வே

சென்னை கோட்டம்
முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் அவர்கள் அலுவலகம்
எலக்ட்ரிக் லோகோ ஷெட், இராயபுரம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரியானவர், இரயில்வேயின் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் https://www.gem.gov.in வாயிலாக விருப்பம் உள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

ஒப்பந்தப்புள்ளி எண்.	GEM/2026/B/7901518
பணி பற்றிய விவரம்	சேவைப் பணி சார்ந்த கஸ்டம் ஒப்பப்புள்ளி இராயபுரத்தில் உள்ள எலக்ட்ரிக் லோகோ ஷெட்-ல் சுத்தம் செய்து தூய்மை காத்தல் பணிகளை இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு மேற்கொள்ளுதல்
ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும்	10-09-2026 அன்று 12.00.00 மணி

குறிப்பு : ஒப்பந்தப்புள்ளி பற்றிய மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் : https://www.gem.gov.in

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர்
ரோலிங் ஸ்டாக், இராயபுரம், தெற்கு ரயில்வே
மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும்

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

CIN: U67100TZ2014PTC020363
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com, அதிகாரப்பூர்வ அதிகாரிகள் கைபேசி எண்: + 91 93446 84194/ 98840 62068/ 99623 33307

[பிற்சேர்க்கை-IV-A]
[விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 30/2021-22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) இன்டஸ்இன்ட் பேங்க் லிமிடெட் (ஐபிஎல்) (உரிமையீந்தோர் நிறுவனம்) வசமிருந்து 11.01.2022 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகளை கையக சுவாதீனம் செய்துள்ளார். ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்-க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமின்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு: ஏலத்தில் பங்கேற்பாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுவது என்னவென்றால்: சித்தார்த் ஹைட்ஸ் அபார்ட்மெண்ட் உரிமையாளர்கள் சங்கம் அளித்துள்ள தகவலின்படி, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் உரிமையாளர்களிடமிருந்து சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் (மாதாந்திரப் பராமரிப்புக் கட்டணம், தாமதக் கட்டணம் மற்றும் கட்டிப் பழுதுபார்ப்பு நிதி) மற்றும் எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய பராமரிப்புக் கட்டணம், தாமதக் கட்டணம் போன்றவை உட்பட, 30.07.2026 தேதியின்படி மொத்தம் ரூ.4,58,560 (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று அறுபது மட்டும்) பாக்கி உள்ளது. வெற்றி பெற்ற ஏலதாரர், ஒஏஆர்பிஎல் நிறுவனத்திடமிருந்து சொத்தின் நேரடி உடைமையைப் பெறுவதற்கு முன்னர், சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தி, அவரிடமிருந்து நிலுவை இல்லை என்ற சான்றிதழைக் கீழே கையொப்பமிட்டவரிடம் சமர்ப்பிக்